### திராவிட மாடல் அரசின் பட்ஜெட்

# அனைத்துத் தரப்பு மக்களுக்கும் - எல்லோருக்குமான பட்ஜெட்டாகும்!

## சட்டப் பேரவையில் திருவையாறு – துரை. சந்திரசேகரன் பேச்சு!

சென்னை,மார்ச் 21-

**சட்டப் பேரவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் திருவையாறு துரை சந்திரசேகரன் பேசுகையில், அனைத்துத் தரப்பு மக்களுக்கும், எல்லோருக்குமான பட்ஜெட்டாக திராவிட மாடல் அரசின் பட்ஜெட் இருக்கிறது என்று குறிப்பிட்டார்.**

**சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் துரை. சந்திரசேகரன் பேசியதாவது:**

நவீன தமிழ்நாட்டின் சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

2025-2026 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மைக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பினை வழங்கிய திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர் நலனே இயக்கத்தின் நலனென்று வாழும் இளம் தலைவர், துணை முதல்வர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண் நிதிநிலை அறிக்கையில் சில கருத்துகளை முன் வைக்க விரும்புகின்றேன். டெல்டா மாவட்டங்களில் நெல் சாகுபடி செய்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தொடர்ந்து ஆண்டாண்டு காலமாக, பரம்பரையாக அந்தத் தொழிலில் ஈடுபட்டு நாட்டுக்கு உணவு உற்பத்தி செய்து தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மற்றவர்களைப்போல உயரவில்லை என்பது நிதர்சனமான உண்மை. பரம்பரையாக நெல் சாகுபடி செய்கின்ற பகுதியான காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை மாவட்டம், கடலூர் மாவட்டத்தில் ஒரு பகுதி, அரியலூர் மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகிய பகுதிகளில் நெல்லை விவசாயம் செய்து வருகின்றவர்கள் (மணியடிக்கப்பெற்றது.) அது விவசாயிகளாக இருந்தாலும்,

பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அனைவரும் இருக்கையில் அமரவும்.

துரை. சந்திரசேகரன்: தொழிலாளர்களாக இருந்தாலும் அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற முடியாத சூழல் இருக்கிறது என்பதை உணர்ந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறுவை சாகுபடி விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக இதுவரையில் ஒன்றிய அரசில் இல்லாத அளவிற்கு, முதன்முதலாக சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பாக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் டெல்டா விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதன்மூலம் நெல்லை விவசாயிகளிடமிருந்து ஊக்கத் தொகை கொடுத்து வாங்கி, தமிழ்நாட்டில்தான் சிறந்த பொது விநியோகத் திட்டம் செயல்படுவதற்கு பிதாமகனாக முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள்.

**விவசாயிகள் வாழ்வில் மறுமலர்ச்சி!**

அதுமட்டுமல்லாமல், விவசாயிகள் ஆண்டுதோறும் கணக்குப் பார்த்தால் எந்த மிச்சமும் இல்லாமல் தொடர்ந்து இருந்து வந்ததை உணர்ந்து முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரத்தை வழங்கி, விவசாயிகளுடைய வாழ்வில் பெரிய மறுமலர்ச்சியை உருவாக்கித் தந்தார்கள். அதுமட்டுமல்லாமல், விவசாயிகள் ரூ.7 ஆயிரம் கோடி கூட்டுறவு வங்கியில் வாங்கியக் கடனை இரத்து செய்து, அவர்களுடைய வாழ்வில் ஒரு புதிய ஒளியை ஏற்றிக் கொடுத்தார். அதற்கு இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விவசாயிகள் தொடர்ந்து பல்வேறு-- போதிய விவசாயத் துறைகளின் மூலமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கடந்த பத்தாண்டுகள் அ.தி.மு.க. ஆட்சியில் முறையாக செயல்படாத காரணத்தினால், பல இன்னல்களுக்கு விவசாயிகள் ஆளாக்கப்பட்டு, கடந்த 4 ஆண்டுகளாக விவசாயம், வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விவசாயிகளினுடைய வாழ்வில் பெரிய மறுமலர்ச்சியை இன்றைக்கு நாம் சந்தித்திருக்கிறோம்.

**சாகுபடி பரப்பு உயர்ந்துள்ளது!**

விவசாயிகளின் கணக்கைப் பார்த்தால், அவர்கள் சித்திரை 1 ஆம் தேதி விவசாயப் பணியை தொடங்கி குறுவைப் பயிரை நடுவார்கள். அடுத்து தாளடிப் பயிர் நடுவார்கள். இப்படி ஓர் ஏக்கர் நிலத்தை கணக்கு செய்தால், மொத்த அந்த ஆண்டினுடைய விவசாயத்திற்கு இயற்கை ஒத்துழைக்க வேண்டும். அதற்குப் பிறகு அந்தப் பயிர்களை எலியிடமிருந்து காப்பாற்ற வேண்டும். அதன்பிறகு புதிதாக காட்டுப் பன்றிகள், மயில்கள் விவசாயிகளினுடைய விளைச்சலை சேதப்படுத்துகின்றன. இப்படி பல்வேறு இயற்கை இடர்ப்பாடுகளுக்கிடையே விவசாயிகள் அந்த விவசாயத்தை கணக்குப் பார்த்தால் ஓராண்டிற்கு இரண்டு போகமும் விளைவித்தால், ஒர் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம்தான் வருமானம் வரும் என்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. ஒரு நெல் மூட்டை ரூ.180 என்று விற்ற காலங்களில் ஒரு பவுன் தங்கத்தின் விலை (8 கிராம்) ரூ.20. ஆனால், தற்போது கிட்டத்தட்ட ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ.60,000/-க்கும்மேல் விற்கப்படுகிறது. ஆனால், நெல் ஒரு மூட்டை ரூ.2,000/- விவசாயிகளினுடைய பொருளாதாரம் மிக பின்தங்கியிருக்கிறது என்பதை உணர்ந்த நம்முடைய திராவிட மாடல் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சீரிய வழிகாட்டுதலில் தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்துதன் விளைவாக 2019-2020 ஆம் ஆண்டில் 146 இலட்சத்து 77 ஆயிரம் ஏக்கராக இருந்த மொத்த சாகுபடிப் பரப்பு. (மணியடிக்கப்பெற்றது.)

பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்கவும்.

துரை. சந்திரசேகரன்: 2023-2024 ஆம் ஆண்டில் 151 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. 2019-2020 ஆம் ஆண்டில் 29 இலட்சத்து 74 ஆயிரம் ஏக்கராக இருந்த இருபோக சாகுபடிப் பரப்பு 2023-2024 ஆம் ஆண்டில் 33 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது. விவசாயிகளின் பாசனத்தை உறுதிப்படுத்த 2021-2022 ஆம் ஆண்டு முதல் மின் இணைப்புகளை பம்பு செட்டுகளுக்கு வழங்கி வருகிறது. இதுவரை ஒரு இலட்சத்து 81 ஆயிரம் பாசன மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வறண்ட நிலங்களும் வளம் பெறுகின்ற வாய்ப்பினை நம்முடைய முதலமைச்சர் அவர்களும், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களும் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

**டெல்டா பகுதிகளில் தூர்வாரப்பட்ட வாய்க்கால்கள்!**

வேளாண் இயந்திரமாக்குதல் திட்டத்தின்கீழ் 55,000 உழவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு, 1109 வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு, 98 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்கப்பட்டு உழவர்களின் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 10,187 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தியதன் விளைவாக 46,000 ஏக்கர் பரப்பளவில் தரிசு நிலங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. டெல்டா மாவட்டத்திலுள்ள சி & டி பிரிவு வாய்க்கால்கள் இதற்கு முன்பு அந்த காலத்தில் தூர்வாரப்படவில்லை. பாசன பயன்பாட்டினை உறுதி செய்கின்ற வகையில் டெல்டா பகுதிகளில் மொத்த சி & டி பிரிவு வாய்க்கால்கள் 10,434 கி.மீ. அதில் 5,427 கி.மீ. தூர்வாரப்பட்டுள்ளது.

மீதமுள்ள 5,007 கி.மீ. வாய்க்கால்களை இந்த ஆண்டு தூர்வார ரூபாய் 19 கோடியே 97 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டுள்ளது. 2020-21 ஆம் ஆண்டில் 89 இலட்சத்து ஒன்பதாயிரம் ஏக்கராக இருந்த பாசனம் பெற்ற சாகுபடிப் பரப்பு, 2023-24 ஆம் ஆண்டில் 94 இலட்சத்து 68 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது.

உழவர்களின் நலன் கருதி ஒன்றிய அரசால் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலைக்குமேல், சன்ன இரகத்திற்கு குவிண்டாலுக்கு 130 ரூபாயும், சாதாரண இரகத்திற்கு குவிண்டால் ஒன்றிற்கு 105 ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. நான்கு ஆண்டுகளில் இதுவரை 147 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 1,452 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு, ஒரு மெட்ரிக் டன்னிற்கு 215 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு, இதுவரை 425 இலட்சம் மெட்ரிக் டன் கரும்புக்கு 848 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் புதியதாக இந்த வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மை செழித்திட உழவர்களுக்கு தேவையான விதைகள், உரங்கள் உள்ளிட்ட இடுப்பொருட்களை விற்பனை செய்ய ஆயிரம் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படுவதை விவசாயிகளின் சார்பில் வரவேற்கிறேன்.

**உயர்த்தப்பட்ட இழப்பீடு நிதி உதவி!**

டெல்டா மாவட்டங்களில் சராசரியாக 18 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. குறுவை பருவத்தில் உற்பத்தியைப் பெருக்கிட டெல்டா மாவட்டங்களில் சிறப்புத் தொகுப்பு உழவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. அதைப்போல மற்ற மாவட்டங்களுக்கு இதை விரிவுபடுத்திய முதலமைச்சர் அவர்களையும், துறையின் அமைச்சர் அவர்களையும் பாராட்டி வரவேற்கிறேன். முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு நிதி உதவிகளை உயர்த்தி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். விபத்து மரணத்துக்கான இழப்பீடு, ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாகவும், இயற்கை மரணத்துக்கான நிதியுதவி 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ஆகவும், இறுதிச் சடங்கு செய்வதற்கான நிதியுதவி 2500 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகவும் வழங்கியதற்கு விவசாயிகள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகளுக்கு அந்தந்த பருவத்திலேயே இழப்பீடு வழங்க துறை நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். கடந்த நான்கு ஆண்டுகளாக 2020-21 ஆம் ஆண்டில் 34,221 கோடி ரூபாய் இந்தத் துறைக்கு வழங்கப்பட்டு, 2025-26 ஆம் ஆண்டில் 45,661 கோடி ரூபாயாக நமது முதலமைச்சர் அவர்கள் இந்த வேளாண் துறைக்கு ஒதுக்கி விவசாயிகள் வாழ்வில் ஒரு பெரிய மறுமலர்ச்சியை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நான்கு ஆண்டுகளில் 23 இலட்சத்து 68 ஆயிரம் விவசாய மின் இணைப்புகளுக்கு மானியமாக 26 ஆயிரத்து 724 கோடி ரூபாயும், 1 இலட்சத்து 81 ஆயிரம் புதிய மின் இணைப்புகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. நெல்லுக்கான ஊக்கத்தொகை 1,531 கோடி ரூபாயாகவும், 21 இலட்சத்து 33 ஆயிரம் விவசாயிகள் பயன்படுத்துகிற வகையில் வழங்கப்பட்டிருக்கிறது.



**ஆங்கில பத்திரிகை பாராட்டு!**

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு 877 கோடி ரூபாயில் 50 இலட்சத்து 70 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுகிற வகையிலும், 46 ஆயிரத்து 33 ஏக்கர் தரிசு நிலங்கள் பயிர் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) குறுவை தொகுப்புத் திட்டம் 271 கோடி ரூபாயில் 12 இலட்சத்து 51 ஆயிரத்து 836 விவசாயிகள் பயன்பெறுகிற வகையில் 181 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறுதானிய உற்பத்தி 50 இலட்சம் ஏக்கர் சாகுபடிக்கு இடுபொருட்கள் மானியம் வழங்கப்பட்டு, 9 இலட்சத்து 73 ஆயிரத்து 186 விவசாயிகள் பயன்பெற்றிருக்கிறார்கள். முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் 186 கோடி ரூபாயில் 21 இலட்சத்து 36 ஆயிரம் விவசாயிகள் பயன் பெற்றிருக்கின்றனர். வறட்சி, கனமழை பயிர் பாதிப்பு நிவாரணமாக ரூ.1.631 கோடி 20 இலட்சத்து 83 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் 5,242 கோடி இழப்பீடு, 30 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. *The Times of India* பத்திரிகையில் குறிப்பிடப்பட்டதைப் போல, "*Jackpot for Tamil Nadu farmers*" என்று வேளாண் நிதிநிலை அறிக்கை பற்றி அவர்கள் குறிப்பிட்டிருப்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலில் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், துறையின் அதிகாரிகளுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2025-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தொடர்பாக ஒருசில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்களும், நிதித் துறைச் செயலாளர் அவர்களும் மிகச் சிறப்பானதொரு நிதிநிலை அறிக்கையை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூ.2000 கோடியில் திட்டம்!

தமிழ்நாட்டின் நீர்வளத்தினைப் பெருக்கி, பாதுகாத்து மேம்படுத்திடும் பொருட்டு, ஒருங்கிணைந்த நீர்வள மேம்பாட்டுத் திட்டம் 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வரவேற்கிறேன். ஏற்கெனவே உள்ள நீர்ப் பாசனக் கட்டுமானங்களைப் புதுப்பித்தல், நிலத்தடி நீர் மேம்பாட்டுத் திட்டங்கள், நீர்நிலைகளையும் புனரமைத்து, மேம்படுத்தி உரிய முறையில் பாதுகாக்கும் பணியினை வரவேற்கிறேன்.

நீர்வளத் துறையில் எங்கள் பகுதியிலுள்ள புதிய கட்டளை மேட்டுவாய்க்கால், மாயனூரில் காவிரியில் பிரிந்து கரூர் மாவட்டம், திருச்சி மாவட்டம்-திருவெறும்பூர், தஞ்சை மாவட்டம்-பூதலூர் ஒன்றியத்தில் 63 ஏரிகள்மூலம் பாசனம் பெறும் இந்த வாய்க்கால் கடந்த 20 ஆண்டுகளாக தூர்ந்து, விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வாய்க்கால் வெட்டிய ஆரம்ப காலங்களில் 1,400 கன அடி பாசன நீர் வந்த நிலையில், பாசன வாய்க்கால் தூர்ந்ததாலும், பாசன மதகுகள் பழுதடைந்ததாலும், தற்போது 300 கன அடி பாசன நீர் மட்டுமே வரும் சூழல் உள்ளது. இதனால், கடைமடை பகுதிகளுக்கு பாசன நீர் வந்தடையவில்லை. இதனை சீர் செய்ய துறையின்மூலம் 300 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை முதலமைச்சர் அவர்களும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் வழங்கி விவசாயிகள் வாழ்வில் ஒளி யேற்ற வேண்டுகிறேன்.

**படுகை அணை அமைத்துத் தாரீர்!**

கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக கல்லணையில் தொடங்கி அணைக்கரை வரை பல்வேறு இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் போடப்பட்டதால் நிலத்தடி நீர் குறைந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, கொள்ளிடம் ஆற்றில், கல்லணைக்கு அருகே விஷ்ணம்பேட்டை கிராமத்தில் ஒரு படுகை அணையும், திருமானூர் அருகே அணைக்குடியில் ஒரு படுகை அணையும் அமைத்துத் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகர்ப்புற வளர்ச்சித் துறை. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பொது சுகாதாரம், இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைக்க 2,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

**திருக்காட்டுப்பள்ளி – திருவையாறில் நவீன பேருந்து நிலையம்!**

தஞ்சாவூர் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தை சீரமைத்திடவும், பழைய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி, நவீன கழிவறை அமைத்திடவும், நகரில் கழிவுநீர் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்திடவும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு, மேலதிருப்பூந்துருத்தி, வல்லம், ஒரத்தநாடு ஆகிய பேரூராட்சிகளில் புதிய அறிவு சார் மையங்கள் அமைத்திட வேண்டுகிறேன். தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு, மேலதிருப்பூந்துருத்தி ஆகிய பகுதிகளில் புதிய நூலகக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுகிறேன். வல்லம் பேரூராட்சியில் பழைய குடிநீர்க் குழாய்களுக்கு மாற்றாக புதிய குடிநீர்க் குழாய்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வளர்ந்துவரும் மக்கள்தொகை, சுற்றுலாப் பயணிகள் வருகையை கருத்திற்கொண்டு, திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி மற்றும் திருவையாறு நகராட்சியில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் இந்தாண்டு 102 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் எடுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். அதில், திருவையாறு தொகுதிக் குட்பட்ட தஞ்சாவூர், திருவையாறு ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிப் பகுதிகளுக்கு கொள்ளிடத்தில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மேம்படுத்தப்படும் கிராமச் சாலைகள்!**

அடுத்து ஊரக வளர்ச்சித் துறை. கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் இந்தாண்டு 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படுவதை வரவேற்கிறேன். முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2025-2026 ஆம் ஆண்டு 6,100 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராமச் சாலைகள் 2,200 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்துவதை வரவேற்கிறேன். 2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் கட்டப்பட்ட பழுதடைந்த வீடுகளுக்கு மாற்றாக 25,000 புதிய வீடுகளைக் கட்ட இந்த ஆண்டில் 600 கோடி ரூபாய் ஒதுக்கியதை வரவேற்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை. இந்த நிதிநிலை அறிக்கையில் 14 புறவழிச் சாலைகள் அமைக்கும் பணியை வரவேற்கிறேன். அதில் தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி புறவழிச்சாலையை அமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தென்பெரம்பூரில் வெண்ணாறு, வெட்டாறு குறுக்கே புதிய உயர்மட்டப் பாலம் அமைக்க வேண்டுமென்றும், விண்ணமங்கலம் அருகே பழைய பழுதடைந்துள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைத்துத் தர வேண்டுமென்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் பல்வேறு திட்டங்களின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு சில துறைகள் அடைந்துள்ள சாதனைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை. ஊட்டச்சத்தினை உறுதி செய்-தொகுப்பு 2 திட்டத்தின்கீழ் 2,374 குழந்தைகள் பயன்பெறுகின்றனர். புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் 16,596 மாணவிகளும், தமிழ் புதல்வன் திட்டத்தின்கீழ் 13,026 மாணவர்களும் பயனடைகின்றனர்.

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை: கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் 4,17,999 மகளிர் பயன்பெற்றுள்ளனர். முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின்கீழ் 1,10,670 குடும்பங்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளன. முதல்வரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் 58,510 கிராம மற்றும் நகர்ப்புற உதவிபெறும் பள்ளிகளில் மாணவ, மாணவியர் பயன்பெறுகின்றனர்.

மகளிர் விடியல் பயணம்!

மகளிர் விடியல் பயணத் திட்டம்: தஞ்சை மாவட்டத்தில் 118.03 கோடி மதிப்பீட்டில் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை: கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2024-2025 ஆம் நிதியாண்டில் பயிறு வகை பயிரிடுதலை ஊக்குவித்தல். (மணியடிக்கப்பெற்றது) 4,855.6 ஹெக்டேர்ஸ் பரப்பிலும் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை 2,836 ஹெக்டேர் பரப்பிலும் மேற்கொள்ளப்பட்டது. நுண்ணுயில் பாசனத் திட்டத்தின்கீழ் 2017-2018 ஆம் நிதியாண்டு முதல் 2024-2025 ஆம் நிதியாண்டு வரை 42.5 கோடி மதிப்பீட்டில் 13,114 ஹெக்டேர்ஸ் பரப்பளவில் 9,995 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்: 27-11-2024 முதல் 11-3-2025 வரை வேலை செய்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம் 2,839 கோடி, பொருட்கூறுக்கான நிதி 957 கோடி ஆக மொத்தம் 3,796 கோடி ரூபாயை ஒன்றிய அரசு இன்று வரை விடுவிக்கவில்லை. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின்கீழ் ரூ.2,152 கோடி ரூபாயை தமிழ்நாட்டிற்கு வழங்காமல் உள்ளது. 2014 ஆம் ஆண்டிற்கு முன்பு ஒன்றிய அரசினுடைய--கடந்த 67 ஆண்டுகளில் மொத்த கடன் சுமார் 55 இலட்சம் கோடி ரூபாய்.

**நாட்டை சூன்யமாக்கும் ஒன்றிய அரசின் கடன்!**

ஆனால் தற்போது, ஒன்றிய அரசின் மொத்த கடன் தொகை 2024 முதல் 176 இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. ஒன்றிய அரசின் நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரத் துறை எனப்படுகின்ற *Department of Economic Affairs* வெளியிட்டுள்ள அறிக்கையின்படி இந்திய வரலாற்றிலேயே இத்தனை குறுகிய காலத்தில் நாட்டின் கடன் அளவு ஒரு மடங்கு அல்ல, இரண்டு மடங்கு அல்ல, மூன்று மடங்கிற்கு மேலே நாட்டின் எதிர்காலத்தை சூன்யம் ஆக்கி கடனை ஒன்றிய அரசு வாங்கியிருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் வாங்கப்பட்ட கடன் பொதுமக்களுக்கும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும், எல்லோருக்குமான அரசாக நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் நாயகராக விளங்கி வருகிறார். (மணியடிக்கப்பெற்றது) திராவிடம் வெல்லும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும் என்றுகூறி, நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு கழக உறுப்பினர் துரை. சந்திரசேகரன் பேசினார்.

---

# தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் - சூரிய சக்தி நிறுவல் பயிற்சி!

## அரசு செய்தி வெளியீடு!

சென்னை, மார்ச் 21-

15 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் "சூரிய சக்தி நிறுவல் பயிற்சி" நடைபெறுகிறது.

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 15 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் சூரிய சக்தி நிறுவல் பயிற்சி வரும் **26.03.2025** முதல் **12.04.2025** தேதி வரை காலை **10.00** மணி முதல் மாலை **5.00** மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் சூரிய சக்தி துறையில் தொழில்முனைவோரின் அடிப்படைகள், சூரிய சக்தி தொழில் மற்றும் சந்தை போக்குகள் பற்றிய கண்ணோட்டம், சூரிய சக்தி அடிப்படைகள் அறிமுகம், சூரிய சக்தி PV அமைப்புகளின் கூறுகள், குழு விவாதம்: சூரிய சக்தி வணிக சவால்கள், சூரிய சக்தி PVக்கான வணிக மாதிரிகளைப் புரிந்துகொள்வது, நிதி திட்டமிடல்: செலவு மற்றும் வருவாய் அமைப்பு, அடிப்படை நிதித் திட்டத்தை உருவாக்குதல், இடர் பகுப்பாய்வு மற்றும் மேலாண்மை, சூரிய சக்தி PVக்கான சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகள், உரிமம் மற்றும் சான்றிதழ் தேவைகளைப் புரிந்து கொள்வது, தேவையான ஆவணங்களைத் தயாரித்தல், மானியம் மற்றும் ஊக்கத்தொகை திட்டங்களை ஆராய்தல், சூரிய சக்தி வணிகங்களுக்கான சந்தைப்படுத்தல் உத்திகள், பிராண்டிங் மற்றும் விளம்பர நுட்பங்கள் போன்றவை வழிமுறைகள் ஆகியன கற்றுத்தரப்படும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் *www.editn.in* என்ற வலைதளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. **8668108141 / 8668102600.**

முன்பதிவு அவசியம்:

அரசு சான்றிதழ் வழங்கப்படும்



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் பார்வையற்றோர் பள்ளியில் கழக தலைவர், முதல்வர் தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் மே. காளிமுத்து ஏற்பாட்டின் பேரில் காலை உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பேரூர் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன், தகவல்தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் ஓய்காசோமசுந்தரம், மாவட்ட சிறுபான்மையினர் உரிமைப் பிரிவு அமைப்பாளர் என்.எம்.சாக்ளா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

---

### தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்:

# "பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி"!

## அரசு செய்தி வெளியீடு!

சென்னை, மார்ச் 21-

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாட்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் பயிற்சி வரும் **26.03.2025** முதல் **28.03.2025** தேதி வரை காலை **10.00** மணி முதல் மாலை **5.00** மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் பேக்கரி பொருட்களின் மூலப் பொருள், பிராண்ட் போன்றவற்றின் கிடைக்கும் தன்மை, கருவிகள் மற்றும் உபகரணங்களின் உள்ளீடுகள், இயந்திரங்கள் முதலியன, ஹைதராபாத் கராச்சி பிஸ்கட், ஜெர்ரா உப்பு பிஸ்கட், இனிப்பு குக்கீகள், ஈஸ்ட் புளிக்கவைக்கப்பட்ட பாம்பே பன், இனிப்பு ரொட்டி, கிரீம் பன், பழ ரஸ்க், பப்ஸ் வகைகள் கேக் வகைகள் எப்படி தயாரிப்பது பற்றி இப்பயிற்சியில் விளக்குவார்கள்.

மேலும் தயாரிப்பு சந்தைப்படுத்துதலின் அம்சங்கள் பேக்கிங் லேபிளிங் மற்றும் அதற்கான விலை வழிமுறைகள் ஆகியன கற்றுத்தரப்படும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் ஆகியவையும் விளக்கப்படும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்குபெறும் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் *www.editn.in* என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032. **8668108141 / 8668102600.**

முன்பதிவு அவசியம்:

அரசு சான்றிதழ் வழங்கப்படும்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாராபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மரக்காணம் கிழக்கு ஒன்றியம் கூனிமேட்டில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா கண்டன உரை நிகழ்த்தினார் .உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக், கழக இளம் பேச்சாளர் ஷாநாவாஷ், டாக்டர் சேகர், மரக்காணம் ரவிக்குமார், தயாளன், பழனி மத்திய ரவிச்சந்திரன், ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.